# மலையகத்தமிழ் இலக்கியமும் அதன் சித்தாந்த நிலைப்பாடுகளும்

லெனின் மதிவானம்

மலையக இலக்கியம் எனும் இலக்கியத் தொகுதியானது, ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கின் மிக முக்கியமான கூறாகப் போற்றப்பட்டு வருகின்றது. இலக்கியத்தில் ஜனநாயகப் பண்பு வளர, இதன் முக்கியத்துவம் சிறப்பாகவே உணரப்பட்டு வெளிக் கொணரப்படும். மலையகத்தின் தனித்துவத் தையும் ஈழத்து இலக்கியத்தின் பொதுமையையும் இணைத்து நிற்கும் தமிழ் இலக்கிய மரபு தோன்றி வளர்ந்துள்ளமையே இதற்கான அடிப்படையாகும்.

மலையக சமூகத்தினை அடிநிலையாகக் கொண்டு தோன்றிய இலக்கியங்களை ஈழத்து இலக்கியத்துடன் அல்லது முழுத் தமிழ் இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கி அவற்றின் இலக்கியத் தரத்தினை மட்டிடுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. மலையகத்தில் இத்தகைய இலக்கியங்கள் தோன்றுவதற்குக் காலாக இருந்த சமூக, வரலாற்று, பண்பாட்டுச் சக்திகளை குறித்துக் காட்டுவதுடன் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரிணமிப்பில் இதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்ட முனைவதாகவே இவ்வாய்வு முயற்சி அமையும்.

மேற்குறித்த கருதுகோளின் அடிப்படையில் மலையக இலக்கியம் குறித்து எழுத முற்படுகின்ற இவ்வாய்வு, அதன் முனைப்பற்ற போக்குகளை மட்டுமே சுட்டிக் காட்ட முனைவதாக அமைகின்றது. இதனை நிரூபிக்க நீண்ட பட்டியல் நீட்ட நான் விரும்பவில்லை. அட்டவணை போட்டு இலக்கியக் கணக்கெடுக்கும் இரசிக விமர்சகர்களுக்கு அப்பணியினை விட்டுவிட்டு, ஈழத்துத் தேசிய இலக்கிய வளர்ச்சிப்போக்கில் மலையக இலக்கியம் எத்தகைய வளர்ச்சியினைப் பெற்று வந்துள்ளது என்பதனையும், அதற்கு அனுசர ணையாக இருந்த இலக்கியங்களையும் எழுத்தாளர் களையும் சுட்டிக் காட்டிச் செல்வது இதன் சாராம் சமாகும். தனிப்பட்ட எழுத்தாளர்களுக்கு முக்கியத் துவம் கொடுக்காது குறிப்பிட்ட போக்கினைப் பிரதி நிதித்துவப்படுத்திய எழுத்தாளர்களின் பெயர்களே இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது.

**ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் மலையக இலக்கியம்:**

இலங்கையை ஈழம் எனக் கூறுதல் பழந் தமிழ் இலக்கிய மரபு. தமிழுடனுள்ள பொதுத் தொடர்பையும் அதேவேளையில் தனித்துவத்தினையும் நன்கு எடுத்துக் காட்டுவதற்கு இப்பதப் பிரயோகம் பொருத்த மானதாக அமைந்துள்ளது. இதனால் தமிழ் இலக்கிய வளர்ச்சியைக் குறிப்பிடும்போது இலங்கை எனும் சொல்லே பெரும் வழக்காக கையாளப்படுகின்றது. இப்பதப் பிரயோகத்தினை மீட்டெடுத்து சனரஞ்சகப் படுத்தியோர், 1954 முதல் இலங்கைத் தமிழ் இலக்கி யத்தின் தேசிய பரிணாமத்துக்காகப் போராடிய முற்போக்கு இயக்கத்தினரே. [1]

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றினைக் கூர்ந்து நோக்குகின்றபொழுது இலங்கையில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் வாழ்வியலையும் சமூக அடிப்படை களையும் வெளிப்படுத்துகின்றவையாக அவை அமைந்து காணப்படுகன்றது. இலங்கையில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்கள் குழுமத்தினர் தமது தனித்துவமான சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்கள் காரணமாக பலவிதமான தனித்துவப் பண்பு

களைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். இத் தனித்துவப் பண்புகளை அச்சமூகத்தின் அடிநிலை யாகத் தோன்றும் இலக்கியங்கள் பிரதிபலிக்கும் என்பது சமூக யதார்த்தமாகும்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி இத்தகைய தனித்து வமான பண்புகளை ஆதாரமாகக் கொண்டு ஈழத் தமிழரை பின்வரும் மூன்று பிரிவாக வகைப்படுத்திக் காட்டுகிறார்.

1. இலங்கையில் பாரம்பரியமாக வரலாற்று காலம் முதல் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள். இவர்கள் இலங்கையில் வடகிழக்கு பிரதேசங்களில் பெருந் தொகையினராகக் காணப்படுகின்றனர்.

2. இலங்கையில் வாழ்ந்து வரும் பாரம்பரிய இஸ்லாமிய மதத்தினர். இவர்கள் வட, கிழக்குத் தெற்குப் பகுதிகளிலும் மத்திய பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

3. 19ம் நூற்றாண்டின் நடுக்கூற்று காலப்பிரிவில் பிரித்தானிய ஆட்சியினால் இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு இலங்கையின் தேயிலை, இறப்பர் பெருந் தோட்டங்களில் வாழ்ந்து வரும் தென்னிந்தியத் தமிழ் மக்கள், இவர்கள் தம் பாரம்பரிய தென்னிந்தியத் தமிழ் வாழ்க்கையைத் தொடர்ந்து பேணி வருகின்றனர். இவர்கள் பிரித் தானிய ஆட்சி முடிவில் இலங்கையர் அல்லாதோர் எனக் கொள்ளப்பட்டனர். இதனால் அவர்களுள் பெரும் பாலானோரை மீண்டும் தென்னிந்தியாவிற்கு அனுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு சமூக அடிப்படைகள் காரணமாக முதலாவது பிரிவினருக்கும் மூன்றாவது பிரிவின ருக்கும் இடையில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. குறிப்பாக, தமிழர் என்ற அடிப்படையில் சிங்களப் பெருந்தேசியவாதத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறைகள் இவ்விரு பகுதிகளையும் பாதித்தது எனலாம். இப்பாதிப்பு முதலாவது பிரிவினரையே அதிகமாகப் பாதித்தது என்பது இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். பொருளாதாரம் என்னும் மேல்கட்டுமானமே சமூக அமைப்பினைத் தீர்மானிப்பதாக உள்ளதால் இவ்விரு பிரிவினரிடையே காணப்பட்ட பொருளாதார அமைப்பு முறையே சமூக வேறுபாடுகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

எனவே, மலையக இலக்கியம் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ள அதேசமயம் தமிழ் இலக்கியத்தின் பிரிக்க முடியாத பிரதான கூறாகவும் அமைந்துள்ளது.

**மலையக இலக்கியத்திற்கான சமூகப் பின்புலம்:**

19ம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மேற்கு ஐரோப்பிய காலனித்துவ வாதிகள் மூன்றாம் உலக நாடுகளைத் தமது காலனித் துவ ஆட்சிக்கு உட்படுத்தியதுடன் அந்நாடுகளில் பெருந்தோட்ட பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு தேவையான தொழிலாளர்களை தமது காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகளில் இருந்தே இறக்கு மதி செய்தனர். இவ்வடிப்படையில் ஒப்பந்த பிணைப்புச்

**ஈழத்து இலக்கியச் செல்நெறியில் மலையக இலக்கியம் அதன் பிரிக்க முடியாத பிரதேச இலக்கியக்கூறாக காணப்படுகின்றது. அவ்வகையில் மலையக இலக்கியமானது ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளதுடன் ஈழத்து இலக்கியப் பரப்பினை ஆழ அகலப்படுத்தியுள்ளது எனலாம்.**

செய்து கொண்டு இங்கு அழைத்து வரப்பட்ட தொழிலாளர்களும், அவர்களோடு இணைந்து வந்த வர்க்கங்களுமே மலையக மக்கள் என்ற பதம் கொண்டு அழைக்கப்படுகின்றனர்.

தென்னிந்தியத் தமிழ் கிராமியப் பின்னணியில் வாழ்ந்த இம்மக்கள் குழுமத்தினர், ஒரு நிலவுடைமை சமூக அமைப்பின் கீழ் விவசாயிகளாக கட்டுண்டு கிடந்தனர். இலங்கையில் முதலாளித்துவ சமூக அமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந் தோட்டப் பயிர்ச் செய்கை முறையில் பரந்துபட்ட தொழிலாள வர்க்கமாக மாற்றப்பட்டனர். இச்சமூக அமைப்பு மாற்றம் மிக முக்கியமானதாகும். தென்னிந்தி யாவில் ஓர் நிலவுடைமை சமூக அமைப்பில் விவசாயி களாக வாழ்ந்து இம்மக்கள் விவசாய வர்க்கத்திற்குரிய குணாதிசயம் கொண்டவர்களாக தமக்கென சிறுநிலத் தையுடையவர்களாகவும் காணப்பட்டனர் என்பதனைப் பின்வரும் நாட்டார் பாடல் வரிகள் எமக்கு உணர்த்து கின்றன.

ஊரான ஊரிழந்தேன்
ஒற்றைப் பனைத் தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயை நா மறந்தேன்
என்ற வரிகளும்

பாதையிலே வீடிருக்க
பழனிசம்பா சோறிருக்க
எருமை தயிரிருக்க
ஏண்டி வந்தோம் கண்டி சீமை [2]
என்ற வரிகளும்

வறுமை, வரட்சி, சுரண்டல், சாதிய அடக்கு முறைகள் என்பனவற்றின் காரணமாக, தென்னிந்தி யாவில் இருந்து இங்கு வந்த மக்கள் புகுந்த மண்ணில் ஏற்பட்ட ஏமாற்றம், சுரண்டல், அடக்குமுறைகள் என்பனவற்றின் காரணமாக, அவர்களின் வஞ்சிக்கப் பட்ட வாழ்க்கையினை நினைத்தபோது தமது தாயகம் பற்றிய ஏக்க உணர்வுகளாக மேற்குறித்த பாடல்கள் பிரவாகம் கொண்டன.

இம்மக்கள் எங்கிருந்தோ வந்து இங்கு தயாராக இருந்த பொருளாதாரத்தை சூறையாடியவர்களல்ல.

தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தாரை வார்த்து மலையக மண்ணை வளம்படுத்தியவர்கள். இது குறித்து மலையகப் பெண்ணொருத்தி தன் சரித்திர தூரிகை கொண்ட புதியதோர் சித்திரத்தை இவ்வாறு கீறுகின்றாள்.

சூனியடிச்ச மலை
கோப்பி கண்டு போட்ட மலை
அண்ணனை தோத்த மலை
அந்தா தெரியுதடி [3]

இப்பாடல் வரிகளை விபரிக்கும்போது மலையகப் பெருங்கவி சி. வி. வேலுப்பிள்ளை, "காடுகளை அழித்துப் புதிய மலைகளை உருவாக்கும்போது சாவு என்பது சர்வ சகஜமானது. மலையகத்தின் ஒவ்வொரு மலைகளும் நிச்சயம் சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்தத்தக்க யாரோ ஒரு தங்கையின் அண்ணனைத் தோத்த மலையாகத்தான் இருக்கும். மலையகத்தின் மலைகள் மீது உங்களுக்கு ஏறிடச் சந்தர்ப்பம் வாய்த்தால், உங்கள் காலடிகளைக் கவனமாக எடுத்து வையுங்கள். ஏனெனில் அவை அண்ணனைத் தொலைத்த மலைகள்" எனக் கூறுவது மலையக மக்களின் வாழ்நிலைகளைச் சிறப்பாகவே உணர்த்தி நிற்கின்றது.

இம்மக்களின் சமூக அமைப்பின் மாற்றம் குறித்து கவிஞர் முத்துவேல் தமது ஆய்வில் "மலையக சமூக அமைப்பு கலப்பே இல்லாத முதலாளித்துவ சமூக அமைப்பாகவே தோற்றம் பெற்று ஸ்தாபிதமானது. மலையகத்தின் அடிநிலை மக்கள் 'இழப்பதற்கென' சொத்துடைமை ஏதும் இல்லாத கூலித் தொழிலாளர்களேயாவர். முதலாளித்துவம் தோற்றுவித்த சொற்ப கூலிக்காக உடல் உழைப்பை விற்கும் தொழிலாள வர்க்கமாகவே இப்பிரதேசத்தில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு மூலதனக்காரர்களுக்கும், உழைப்பை விற்பவர்களான பாட்டாளி வர்க்கத்தினருக்கும் இடையில் நிலவுகின்ற உற்பத்தி உறவே மலையக சமூக, மனித ஊடாட்டத்தின் அடிப்படையாகும். இஃது ஒரு முரண்பாடுடைய உறவு. அதுவும் நேச முரண்பாடாக அன்று பகை முரண்பாடாக வரலாற்றுப் பரிணாமத்தை அடையச் செய்யும் மூலாதார அம்சமான வர்க்கப் போராட்டமானது இப்பகை முரண்பாட்டின் அடிப்படையில் பிறப்பதேயாம்" எனக் குறிப்பிடுகின்றார்.[5]

இவ்வாறாக மலையக சமூகத்தின் அடிநிலை மக்கள் குறித்து நோக்குகின்றபோது, "எங்கிருந்தோ வந்து தயாராக இருந்து பொருளாதார வாய்ப்புகளை அபகரித்துக் கொண்ட மக்கள் அல்ல மலையக மக்கள். இவர்கள் எந்தவொரு நாகரிக சமூகத்தினதும் மூலத்தைப் போலவே, காடுகளை அழித்து வளமாக்கி புதியதோர் பொருளாதாரத்துறையை ஏற்படுத்தியவர்கள். இவர்கள் அமைத்த இந்தப் பொருளாதாரத் துறையும் அதைச் சார்ந்த அமைப்புகளும், இன்னும் இந்நாட்டின் ஆதாரமாக இருக்கின்றன. இந்த மக்களின் உருவாக்கமும் வரலாறும் யாரையும் போலவே இவர்களும் இம்மண்ணின் மக்களே என்பதை ஆதாரப்படுத்துகின்றன. நமது வரலாறு குறித்த கண்ணோட்டம் நம்மிடையே நம்பிக்கையையும் உறுதியையும் வளர்க்க உதவும்" [6]

**தென்னிந்தியத் தமிழ் கிராமியப் பின்னணியில் வாழ்ந்த இம்மக்கள் குழுமத்தினர், ஒரு நிலவுடைமை சமூக அமைப்பின் கீழ் விவசாயிகளாக கட்டுண்டு கிடந்தனர். இலங்கையில் முதலாளித்துவ சமூக அமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை முறையில் பரந்துபட்ட தொழிலாள வர்க்கமாக மாற்றப்பட்டனர். இச்சமூக அமைப்பு மாற்றம் மிக முக்கியமானதாகும்.**

ஒருபுறமான காலனித்துவ ஆதிக்கமும் மறுபுறமான சமூக உருவாக்கமும் இணைந்து தாம் தனித்துவமான சிறுபான்மை இனமென்ற உணர்வை, பிரக்ஞையை உருவாக்கியுள்ளது எனலாம். இன்றுவரை இவர்கள் பல்வேறு விதமான சுரண்டல்களுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உட்பட்டு வருகின்றனர். ஒரு தேசிய சிறுபான்மை இனத்தின் எழுச்சிபற்றிய கருத்தினை முன்வைக்கும் ஒரு பிற்போக்குவாதியின் பார்வையும் ஓர் மார்க்சியவாதியின் பார்வையும் அடிப்படையில் முரண்பாடுள்ள ஒன்றாகும் என்பதும் இவ்விடத்திற் கவனத்திற் கொள்ளத்தக்கதொன்றாகும். மலையகத் தேசிய எழுச்சியினை, தேசியம் குறித்த பார்வையினை உழைக்கும் மக்கள் சார்பான கண்ணோட்டத்துடன் நோக்குவது அதன் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு கால்கோளாக அமையும்.

இவ்விடத்தில் பிறிதொரு விடயம் குறித்தும் கவனம் செலுத்துதல் அவசியமானதாகும். இதுவரை காலமும் மலையக மக்கள் என்ற பதம் பெரும்பாலும் மலையகப் பெருந்தோட்டத்துறை சார்ந்தவர்களையும் அவர்களோடு இணைந்த மக்கள் குழுமத்தினரையுமே குறிப்பதாக அமைந்து காணப்பட்டது. அண்மைக் காலத்தில் மலையகத் தேசிய சிறுபான்மை இனம் என்ற உணர்வின் வளர்ச்சியுடன் மலையகச் சமூக அமைப்புடன் தொடர்பு கொண்ட அனைவரையும் மலையகத் தமிழர் என்ற சமூக அடையாளத்துடன் இணைத்து நோக்கப்பட வேண்டும் என்ற கருத்துநிலை வளர்ச்சியடைந்துள்ளது. அவ்வாறு மலையகத் தேசிய சிறுபான்மையினர் என்ற அடையாளத்துடன் இணைக்கப்பட வேண்டியவர்கள் பின்வருமாறு:

1. மலையகத்தில் நிரந்தரமாக வசிக்கின்றவர்கள், உதாரணமாக, தோட்டப்புற உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் உத்தியோகஸ்தர்கள், நகர்ப்புற வியாபாரிகள் போன்றோர்.
2. மலையகத்தில் இருந்து வெளியேறி மலையகத்திற்கு வெளியில் வாழ்ந்து கொண்டிருக்கும் அதேசமயம் மலையகத்தை வசிப்பிடமாகக் கொண்ட இந்திய வம்சாவளியினர்
3. மலையகத்தில் இருந்து வெளியே திரும்ப முடியாத அல்லது திரும்ப விருப்பம் இல்லாத மலையக அடையாளத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும்

இந்திய வம்சாவளியினர்
4. கடந்தகால அரசியல், பொருளாதார நிர்ப்பந்தம் காரணமாக மலையகத்தில் இருந்து வெளியேறி வடகிழக்கின் எல்லைப்புறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் (மலையக அடையாளத்தால்) இந்திய வம்சாவளியினர்
5. வடகிழக்கு மக்களுடன் சம்பந்தம் இல்லாத அதேசமயம் மலையகத்திற்கு வெளியில் வாழும் (மலையகத்திற்கு வராத) இந்திய வம்சாவளி மக்கள்[7]
6. மலையக பெருந்தோட்டத்துறை உற்பத்தியுடன் சம்பந்தப்படாத அதேசமயம் நகர்ப்புறங்களில் சேரியில் வாழும் நகரநிலை தொழிலாளர்கள்

இம்மக்கள் பிரிவினர் வடகிழக்குத் தமிழரின் பண்பாட்டினைவிட மலையகத் தமிழரின் பண்பாட்டுப் பாரம்பரியங்களை அதிகம் தழுவுகின்றவர்களாகவும் இவற்றுடன் அதிக ஒற்றுமை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். ஏனைய மக்களோடு ஒப்பிடுகின்றபோது இவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இம்மக்களின் சுயநிர்ணய உரிமை, சுரண்டல் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டம் என்பனவற்றினை முன்னெடுக்கின்றபோது சிறு சிறு தேசிய இனங்களுக்கானதென தனித்தனியாக எடுக்க முடியாது. அதேசமயம் அவற்றைப் புறக்கணித்து விடவும் முடியாது. எனவே, அவற்றினை மலையகத் தமிழர் என்ற தேசியத்துடன் இணைத்து முன்னெடுப்பதே முற்போக்கானதாகும்.

மலையகம் என்பதைப் பரந்த அடிப்படையில் நோக்குகின்றபோது மேற்குறிப்பிட்ட மக்கள் திரளினரை உள்ளடக்க வேண்டும் என்ற கருத்து ஆரோக்கியமானதாகும். ஆகவே, மலையக இலக்கியம் குறித்த ஆய்வும் இத்தகைய பரந்த கண்ணோட்டத்திலேயே அமைய வேண்டும். மலையக இலக்கியம் குறித்த ஆய்வு இன்றுவரை பின்வருவோரையே ஆதாரமாகக் கொண்டு அமைந்துள்ளது.

1. பெருந்தோட்ட உற்பத்தியுடன் தொடர்பு கொண்ட தொழிலாளர்களைப் பற்றியது. இதில் கங்காணிமார்களும் அடங்குவர்.
2. தோட்டத்துறை சம்பந்தப்பட்ட நிர்வாக உத்தியோகஸ்தர்கள், ஆசிரியர்கள் என்போரையும் பற்றியது.
3. பெருந்தோட்டத்துறை சார்ந்த நகரங்களில் வாழும் வணிகர்களைப் பற்றியது.

மலையக ஆக்க இலக்கியங்களும் ஆய்வுகளும் மேற்குறித்த மக்கள் கூட்டத்தினரைப் பற்றியதாகவே இருந்துள்ளது. மலையகத் தேசியம் குறித்த பார்வையை பரந்த கண்ணோட்டத்தில் நோக்கின் அதனுடன் இணைக்கப்படவேண்டிய சகலரையும் இணைத்து ஆய்வு செய்யப்பட வேண்டியது அறிஞர்களின் கடன். இப்பார்வை மலையக இலக்கியத்தைச் ஆழ அகலப் படுத்தும்.

**மலையக இலக்கியத்தில் சித்தாந்த நிலைப்பாடுகள்:**

மலையக சமூக அமைப்பில் நிலவும் ஒரு கூட்டு வாழ்க்கை முறையானது உழைப்புடன் அல்லது உற்பத்தியுடன் தம்மை சம்பந்தப்படுத்திக் கொள்ளும் போது அதன் வெளிப்பாடாக பீறிட்டு எழுகின்ற கலை இலக்கிய உணர்வுகளும் இவ்வம்சத்தினைப் பிரதிபலிப்பதாக அமையும் கூட்டு வாழ்க்கை முறையானது சோகத்தை இசைத்தாலும் அவைகூட சமூக அசைவியக்கத்தை முன்னெடுப்பதாகவே அமையும்.

இவ்வகையில் மலையக இலக்கியத்தினைப் பின்வரும் அடிப்படைகொண்டு நோக்குதல் பயன்மிக்க தொன்றாகும். சமூக மாற்ற செயற்பாடுகளில் இலக்கியம் வழிகாட்ட வேண்டும். அதனை சாதிப்பதற்கான அணுகுமுறையை வாழ்க்கைப் பிரச்சனைகளை தெளிவுபடுத்துவதாக அமையவேண்டும். எனவேதான் இலக்கியம் காலத்தைப் பிரதிபலிப்பதாக மட்டுமன்றி அதனை உருவாக்குகின்ற பணியினையும் ஆற்றுகின்றது. இவ்வம்சம் மலையக இலக்கியத்திற்கும் பொருந்தும்

மலையக இலக்கிய வரலாற்றை கூர்ந்து நோக்குகின்றபொழுது அவ்விலக்கியத் தொகுதி இரு வகையினரால் எழுதப்பட்டுள்ளன.

அவை பின் வருமாறு:

1. மலையகத்தை வாழ்விடமாகக் கொண்டு அந்தப் பண்பாட்டிற்குள்ளிருந்து முகிழ்ந்த இலக்கிப் படைப்பாளிகள் (மலையக மண்ணைச் சார்ந்தவர்கள்)
2. மலையகத்தோடு தொடர்பு கொண்டு அதே சமயம் மலையகத்தை பிறப்பிடமாகக் கொள்ளாத இலக்கியப் படைப்பாளிகள்

இவ்விருவகைப்பட்ட எழுத்தாளர்களினாலும் மலையக இலக்கியம் வளப்படுத்தப்பட்டு வந்துள்ளதென்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதன் முதலாவது பிரிவில் சி.வி. வேலுப்பிள்ளை, என். எஸ்.

**எங்கிருந்தோ வந்து தயாராக இருந்து பொருளாதார வாய்ப்புகளை அபகரித்துக் கொண்ட மக்கள் அல்ல மலையக மக்கள். இவர்கள் எந்தவொரு நாகரிக சமூகத்தினதும் மூலத்தைப் போலவே, காடுகளை அழித்து வளமாக்கி புதியதோர் பொருளாதாரத்துறையை ஏற்படுத்தியவர்கள். இவர்கள் அமைத்த இந்தப் பொருளாதாரத் துறையும் அதைச் சார்ந்த அமைப்புகளும், இன்னும் இந்நாட்டின் ஆதாரமாக இருக்கின்றன. இந்த மக்களின் உருவாக்கமும் வரலாறும் யாரையும் போலவே இவர்களும் இம்மண்ணின் மக்களே என்பதை ஆதாரப்படுத்துகின்றன.**

எம். ராமையா, சாரல்நாடன், அந்தனிஜீவா, மல்லிகை சி. குமார், மரியதாஸ், என்.முத்துவேல், எல். சாந்தகுமார், மாத்தளை வடிவேலன், மாத்தளை சோமு, கேகாலை கைலைநாதன், லெனின் மதிவானம், ராகலை பன்னீர் முதலானோரைக் குறிப்பிடலாம். இம்மண்ணைச் சாராத அதேசமயம் இம் மண்ணுடன் நேசபூர்வமான உறவினைக் கொண்டவர்களாக, இம்மக்கள் குறித்த இலக்கியம் படைப்பதில் யோ. பெனடிக்ற் பாலன், செ. கணேச லிங்கன், நந்தி, புலோலியூர் க. சதாசிவம், வ. அ. இராசரத்தினம் அ. செ. முருகானந்தம், சுபத்திரன், கே. டானியல், சி. நாகராஜன், வ. ஐ. ச. ஜெய பாலன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்த இரண்டுவகையான எழுத்தாளர்களிடையேயும் சிற்சில வேறு பாடுகள் கண்டுகொள்ளத்தக்கனவாய் உள்ளன. மலையக மக்களின் வாழ்வியலை அதன் உற்பத்திமுறையினைப் புரிந்துகொண்டு இலக்கியம் படைப்பதிலேயே இவ்வேறுபாடு அமைந்து காணப்படுகின்றது.

மலையக பண்பாட்டிற்குள் நின்று அம்மக்கள்பற்றிய இலக்கியம் படைப் பவர்கள் மலையக வாழ்வியலின் உள் நின்று அதன் உற்பத்திமுறையினை உணர்ந்து இலக்கியம் படைக்க முனைவதைக் காணலாம் (இவ்விடத்தில் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அனைத்து எழுத்தாளர்களையும் குறிப்பிடமுடியாது). யதார்த்த நோக்கு, சமூக அசைவியக்கம், வர்க்க முரண்பாடு என்பவற்றினைச் சித்தரிப்பதில் இவர்களிடையே நுண்ணிய தத்துவார்த்த வேறுபாடுகள் உண்டு என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடவேண்டி உள்ளது.

இந்நிலையில் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொள்ளாத, அதே சமயம் அதனோடு தொடர்பு கொண்ட இலக்கிய கர்த்தாக்களினால் படைக் கப்பட்ட இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு நோக்குகின்றபோது, இம்மக்கள்மீதான நேசபூர்வமான சிந்தனையைக் கொண்டுள்ள அதேசமயம் மலையக மக்களின் வாழ்வியலைப் புரிந்துகொண்டு இலக்கியம் படைப்பதில் இடறுகின்றனர். உதாரணமாக, வடகிழக்குப் பகுதியைச் சார்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளில் இம்மக்கள் குறித்த கரிசனை இடம்பெறுகின்ற அதேசமயம், நிலவுடைமை சார்ந்த ஒரு விவசாய வர்க்கத் திற்குரிய சிந்தனை முறையையே அவர்கள் முன்வைக்க முனைந்துள் ளனர். எடுத்துக் காட்டாக, யோ. பெனடிக்ற் பாலனின் 'சொந்தக்காரன்', தி. ஞானசேகரனின் 'குருதி மலை' முதலிய நாவல்களில் இப்பண்பு முனைப்புற்றிருப்பதைக் காணலாம். ஒரு காலகட்ட ஆர்ப்பரிப்பால் உழைக்கும் மக்கள் நலன் சார்ந்த பதாகையை உயர்த்திப் பிடித்த கலைஞர்களில் ஒருவரான சுபத்திரன் 1977ம் ஆண்டு துப்பாக்கிச் சூட்டுக்கு இரையான சிவனு இலட்சுமணன் குறித்து இவ்வாறு கவிதை வரைகின்றார்

"சிவனு
எதனைக் கேட்டான்?
அவன் உழைத்த பூமியிலே
அதற்கு முன்னர்
அவன் பூட்டன் சமாதியிலே
தனக்கொரு துண்டு
தா என்று கேட்டான்
....................
....................
துண்டு நிலம்தான் கேட்டான்
துவக்கால் அடித்து அவனை
தேயிலைக்கு உரமாக்கி
திருப்தியடைந்தீரே!"[8]

இவ்வாறாக நோக்குகின்றபோது நிலத்தை சொந்தமாக்குவதில் அல்லது நிலத்திற்காகப் போராடுவதில் காட்டிய அக்கறை மலையக மக்களின் வாழ்வியலுடனும் உணர்வுகளுடனும் இணைந்திருந்த தனியுடை மைக்கு எதிரான போராட்டம் என்பதை வலியுறுத்தத் தவறிவிடுகின்றனர். தவிரவும் இவர்களது பெரும்பாலான படைப்புகளில் யதார்த்த சிதைவும்


கே. கணேஷ்


தெளிவத்தை யோசப்


வ. அ. ராசரத்தினம்


செ. கணேசலிங்கன்

**சமூக மாற்ற செயற்பாடுகளில் இலக்கியம் வழிகாட்ட வேண்டும். அதனை சாதிப்பதற்கான அணுகுமுறையை வாழ்க்கைப் பிரச்சனைகளை தெளிவுபடுத்துவதாக அமையவேண்டும். எனவேதான் இலக்கியம் காலத்தைப் பிரதிபலிப்பதாக மட்டுமன்றி அதனை உருவாக்குகின்ற பணியினையும் ஆற்றுகின்றது. இவ்வம்சம் மலையக இலக்கியத்திற்கும் பொருந்தும்**

காணப்பட்டது. கே. ஆர். டேவிட்டின் 'வரலாறு அவளைத் தோற்றுவித்தது' (நாவல்), தமிழக எழுத்தாளர் புதுமைப்பித்தனின் 'துன்பக் கேணி' போன்றன இதற்குத் தக்க எடுத்துக் காட்டுகளாகும். மலையக சமூகத்து யதார்த்தத்தையும் மனித ஊடாட்டத்தையும் புரிந்து கொண்டு ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டதிலும், அத்தகைய ஆக்க இலக்கியங்கள், வெளிவரவும் துணை நின்றவர்களாக பேராசிரியர் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மலையக சமூகம் குறித்து இவர்களது குறிப்புகள், ஆய்வுகள், மலையக சமூக அமைப்பின் உற்பத்தி உறவுகள், உற்பத்தி முரண்பாடுகள் குறித்த தெளிவான பார்வையை முன்வைக்கின்றன. மலையக மண்ணைச் சார்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளையும் அதனூடாக வெளிப்படும் அவர்களின் சிந்தனைத் தெளிவுப்பார்வை என்பனவற்றின் ஆதாரமாகக் கொண்டு அவர்களைப் பின்வருமாறு இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்

1. முற்போக்குவாதச் சிந்தனை நிலை நின்று இலக்கியம் படைப்பவர்கள்
2. மார்க்சிய சித்தாந்த நிலை நின்று இலக்கியம் படைப்பவர்கள்

இவ்விடத்தில், முற்போக்குவாதம், மார்க்சியவாதம் ஆகிய சிந்தனைத் தொழிற்பாடுகள்

"முற்போக்குவாதம்பற்றிய ஆய்வு, அது சிந்தனைத் தெளிவுநிலை (மாத்திரமே) என்பதனை நிலைநிறுத்துகின்றது. மார்க்சியத்தை விபரிக்கும் அறிஞர்கள் அதனை அரசியல் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டி. அன்றேல் அரசியல் நடவடிக்கைகளுக்கான ஆற்றுப் படை என்பர். மார்க்சியத்தை திரிகரண சுத்தியாக ஏற்றுக்கொள்ளும்போது அவ்வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு உலகை மாற்றி மனித சமூகத்தின் முற்போக்குப்பாதையினை உறுதிப்படுத்தும் அரசியல் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளுதல் இயல்பாகின்றது. ஆனால் முற்போக்குவாதம்பற்றிய எண்ணத் தொய்வுநிலை அத்தகைய நேரடி நடவடிக்கை நிலையினைச் சுட்டி நிற்பதில்லை. மார்க்சியவாதிகள் முற்போக்குவாதிகளே. ஆனால் முற்போக்குவாதிகளோ மார்க்சியவாதம் வற்புறுத்தும் உலக மாற்றத்துக்கான அரசியல்மாற்றத்தினை, நேரடி இயக்க முறைகள் மூலம் நிலைநிறுத்தும் இயக்கவாதியாக தொழிற்படுவதில்லை. முற்போக்குவாதம் எண்ணத் துய்ப்பும் செயற்பாடும் ஒருவரை அதனைப் பூரணமாக நடைமுறைப் படுத்தும் அரசியல் நடவடிக்கைகளாக மாற்றலாம். ஆனால் முற்போக்குவாத நிலை அந்த நிலையினை குறிக்காது"[9]

முதலாவது பிரிவினர் மலையக இலக்கியத்தினை முற்போக்கு உணர்வுடன் நோக்கியதோடு, மண் வாசனை மிக்க படைப்புகளை வெளிக் கொணர்வதில் முக்கியத்துவம் உடையவர்களாக காணப்படுகின்றனர். இப்பிரிவில் சி. வி. வேலுப்பிள்ளை, என். எஸ். எம். ராமையா, சாரல்நாடன், தெளிவத்தை யோசப், அந்தனி ஜீவா, மல்லிகை சி. குமார், மாத்தளை வடிவேலன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். மலையக மக்களின் வாழ்வியலையும் இயற்கையையும் ஒன்றாக நேசித்து, காதலிக்கின்ற போக்கினை இவர்களது படைப்பில் காணலாம்.

மலையக சமூகம் குறித்த தீட்சண்யம் மிக்கதும் யதார்த்தபூர்வமானதுமான தத்துவார்த்த பார்வையினை கொண்டிராமை காரணமாக, இச்சமூக அமைப்பில் நிலவிய உற்பத்தி முறைகள், உற்பத்தி உறவுகள், சமூக அரசியல், கலாச்சாரம் குறித்த விஞ்ஞான பூர்வமான தெளிவற்றோராய்க் காணப்பட்டமை அவ்வணியினரின் பலவீனமாகும்.

இவ்விடத்தில்தான் இரண்டாவது பிரிவினர் முக்கியத்துவம் உடையவர்களாக காணப்படுகின்றனர். மார்க்சியத்தின் உள்ளடக்கக் கூறுகள்பற்றி லெனின் கூறியதை இவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

"வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்ற தத்துவம் காட்டுவதென்ன? உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் விளைவாக ஒரு சமுதாய அமைப்பு முறையில் இருந்து இதைவிட உயர்தரமான சமுதாய அமைப்புமுறை எப்படி வளர்கின்றதென்பதை அது காட்டுகின்றது. இயற்கை என்பது வளர்ச்சி பெற்றுக் கொண்டே இருக்கும் பருப்பொருள்என்பது மனிதனுக்கு அப்பால் சுயமாக இருந்து பிரதிபலிக்கின்றது. அதேபோலத்தான் மதம், அரசியல் முதலானவை சம்பந்தமாக மனிதன் கொண்டிருக்கும் பல்வேறு கருத்துக்களும் போதனைகளும் சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையைப் பிரதிபலிக்கின்றது. அரசியல் ஏற்பாடுகள் என்பவை எல்லாம் பொருளாதார அஸ்திவாரத்தின்மீது நிறுவப்பட்ட மேல் கட்டுமானமே ஆகும்"[10]

இவ்வாறானதோர் நிலைப்பாட்டினை ஏற்றுக் கொண்டு அவற்றினை மாறிவருகின்ற மலையகச் சூழலுக்கு ஏற்ற வகையில் பிரயோகிப்பவர்களாக இப்பிரிவினர் காணப்படுகின்றனர். இப்பிரிவில் பி. மரியதாஸ், எம். முத்துவேல், எல். சாந்திகுமார் (இன்று இந்நிலைப்பாட்டுக்கு எதிரானவராக சிதைந்து விட்டார்), கேகாலை கைலைநாதன் போன்றோருடன் இதன் அடுத்த கட்ட பரிணாமத்தை தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் மலையக இலக்கியத்தில் சுவடு பதிக்கத் தொடங்கிய இளம் தளிர்களான லெனின் மதிவானம், ஜெ. சற்குருநாதன், ஜெ. ட்ரொட்ஸ்கி,


க. கைலாசபதி

றாகலை பன்னீர் முதலானோரைக் குறிப்பிடலாம். இவர்களுக்கிடையே சிற்சில நுண்ணிய தத்துவார்த்த வேறுபாடுகள் காணப்படினும் பொதுவுடைமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டு அதன் வழி இலக்கியம் படைப்பதில் முக்கியத்துவம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

மலையக இலக்கியம் என்பது ஆயிரக்கணக்கான தொழிலாளர் களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சமூகத்தில் இலக்கியமாகக் கொண்ட சமூகத்தின் விளைபொருளாக உள்ளமையினால் பாட்டாளி வர்க்கம் சார்ந்த தத்துவ சிந்தனைகள் வேகமாகவும் ஆழமாகவும் மலையகப் புத்திஜீவிகளின் சிந்தனையில் செல்வாக்குச் செலுத்தியது எனலாம். இதன் காரணமாகத்தான் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு எதிராகத் தோன்றிய இலக்கியக் கோட்பாடுகளான அழகியல்வாதம், அமைப்பியல் வாதம், பின் அமைப்பியல்வாதம், பின் நவீனத்துவம், இருத்தலியல் முதலியன மலையக இலக்கியத்தில் வேரூன்ற முடியாமற் போனமை ஒரு தற்செயல் நிகழ்ச்சி அல்ல. மலையக மக்களின் கலாச் சாரப் பண்பாடுகளில் ஒன்றாகச் சாதிமுறை விளங்குகின்றது. தென் னிந்திய நிலப் பிரபுத்துவ சமூக அமைப்பில் இச்சாதி முறை தோற்றம் பெற்று பாதுகாக்கப்பட்டு வந்திருப்பினும் இலங்கைப் பெருந்தோட்ட உற்பத்திமுறையிலும் அது


மாத்தளை சோமு

**மலையக சமூகத்து யதார்த்தத்தையும் மனித ஊடாட்டத்தையும் புரிந்துகொண்டு ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டதிலும், அத்தகைய ஆக்க இலக்கியங்கள், வெளிவரவும் துணைநின்றவர்களாக பேராசிரியர் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மலையக சமூகம் குறித்து இவர்களது குறிப்புகள், ஆய்வுகள், மலையக சமூக அமைப்பின் உற்பத்தி உறவுகள், உற்பத்தி முரண்பாடுகள் குறித்த தெளிவான பார்வையை முன்வைக்கின்றன.**

தொடரக் கூடியதாக இருந்தது. (நிலப் பிரபுத்துவத்தின் சிதைவில் இருந்துதான் முதலாளித்துவ சமூக அமைப்பு தோற்றம் பெற்றது என்ற போதிலும் அது இழந்து கொண்டிருக்கும் நிலப்பிரபுத்துவத்தில் இருந்து தனக்கு சாதகமான அம்சங்களை உள்வாங்கிக் கொள்ளும்)

சாதிமுறையானது பொருளாதாரத்துறையில் அதிக தாக்கம் செலுத்தாத ஒன்றாக இருப்பினும் அது மலையக மக்களின் சமய சடங்குகளில் பெரும் தாக்கத்திற்குரிய ஒன்றாக விளங்குகின்றது. லயன்கள் சாதியத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தமையும் (இன்றும் சில தோட்டங்களில் இந்நிலைமை தொடர்கிறது) குடும்ப வழிபாடு சாதிய அமைப்பினை அடிப்படையாகக் கொண்டிருந்தமையையும் காணலாம். இதனை மேலும் வலுப்படுத்த பிரிட்டிஷார் போட்டித் தெய்வ வழிபாடுகளை ஊக்குவித்தனர்.


லெனின் மதிவானம்

இவ்வாறாக, மலையக சாதியமைப்பு முறையில் இறுக்கமான முரண் பாடுகள் தளர்ச்சி கண்டு மனிதநேய உறவுகள் நிலைபேறடைவதற்கு மூலமாய் அமைந்தது காலனித்துவம் தொடக்கி வைத்த முதலாளித் துவம் வர்க்க அடிப்படையிலான உறவேயன்றி வேறில்லை. லயத்தில் வாழ்ந்த யாவரும் (பெரிய கங்காணிமாரைத் தவிர) கூலித்தொழிலாளர் களானதால் முகாமைத்துவ வர்க்கத்தினதும் இதர வர்க்கத்தினரதும் பார்வையில் தரங்குறைந்தவர்களாகவே பட்டனர். தொழிலாளர்கள் யாவருக்கும் உழைப்பை விற்பதற்கான கூலியின் அளவு ஒன்றே. இவ்வாறு காலனித்துவ அமைப்பின் அடிப்படையில் சேவைசெய்தோரான அதிகாரத்துவ

முகாமைத்துவ சிறு முதலாளித்துவ வர்க்கத்தினர் தொழிலாளரை ஒரு சேர நோக்கிய போது நோக்கும் அணுகலும் நடத்துகை யாவும் சாதிய வேறுபாட்டுணர்வையும் அதன் செயன்முறைகளையும் மாறுபடுத்தின. தொழிலாளர்கள் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சனைகள் அனைத்தும் ஒரே மையத்தை அடிநிலையாகக் கொண்டிருந்தன. இப்பின்னணியில் மலையக இலக்கியம் குறித்து நோக்குகின்றபொழுது மலையகத்தில் 'தலித் இலக்கியம்' தோன்றாமல் இருப்பது தற்செயல் நிகழ்ச்சி அல்ல. இன்றைய உலக மயமாதல் சூழலானது மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தியுள்ளதுடன் அவை இயற்கை யானதென கற்பிதம் செய்து மனிதர்களிடையே போட்டியை வளர்த்து ஒருவரை ஒருவர் முந்திச் செல்வதற்கு எதையும் செய்யலாம் என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. இப்பின்னணி மனித குல சுபீட்சத் திற்கான வர்க்கப் போராட்டத்தை சிதைப்பதற்கான பால், சாதி, இன, மத ரீதியான ஒடுக்கல்களைத் தீவிரப் படுத்தி உள்ளது.

மலையகத்தில் புதிதாக எழுச்சி பெற்றுக் கொண்டி ருக்கும் மத்தியதர வர்க்கம் சாதிய அடிப்படையை கருவியாகக் கொண்டு தமது நலனை காக்கத் தொடங் கியுள்ளது. சாதிய முரண்பாட்டைப் பிரதானமாக்கி வர்க்க முரண்பாட்டைச் சிதைக்கும் முயற்சிகளை ஏகாதிபத்திய நிறுவனங்களும் அரசியற் கட்சிகளும் செய்து வருகின்றன. அண்மையில் ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பப்பட்ட 'தப்பு' நாடகம் இதற்குத் தக்க எடுத்துக் காட்டாகும். தவிரவும் மலையகத்தில் சாதியை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளும் சங்கங்களும் நாளுக்குநாள் பெருகி வருகின்றன என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.

மலையகப் பெண்களின் நிலை குறித்துச் சிந்திக் கின்றபோது இனம், மதம், மொழி வர்க்க அடிப்படை யிலான ஒடுக்குமுறைகளுக்கு உட்பட்டு வந்துள்ள மையையும் வருகின்றமையையும் உணரலாம். குறிப்பாக, மத்தியதர வர்க்கப் பெண்கள் வர்க்க அடிப்படையிலான ஒடுக்குமுறைக்கு உட்படவில்லை யாயினும் ஏனைய ஒடுக்குமுறைகள் அவர்களையும் பாதிக்கவே செய்தன. குறிப்பாக, பெருந்தோட்டத் துறை சார்ந்த உற்பத்தியுடன்கூடிய உழைக்கும் வர்க்கப் பெண்கள் இதுவரை காலமும் உழைப்பு, சுரண்டல், நிர்வாக அடக்கு முறைகள், பாலியல் பலவந்தம்/வல்லுறவு, குடும்பரீதியான அடக்கு முறை கள் என்பனவற்றிற்கு உட்பட்டே வந்துள்ளனர். புதுமைப்பித்தனின் 'துன்பக்கேணி'யில் இருந்து நமது யுகத்துக் கவிஞரான வே. தினகரன் வரையில் இப்பெண்கள் பிரச்சினைகளை இலக்கியமாக்கி யுள்ளனர். இவ்வொடுக்குமுறைகளை இவ்வெழுத் தாளர்கள் தத்தம் நிலைப்பாடுகளுக்கு ஏற்ப வெவ்வேறு தளங்களில் இருந்து நோக்கியுள்ளனர். ஈழத்தில் ஏனைய பிரதேசம் சார்ந்த இலக்கியங்களோடு ஒப்பிட்டு நோக்குகின்றபொழுது 'மலையக இலக்கி யத்தில் பெண்விடுதலை' எனும் சிந்தனைத் தொழிற் பாடானது சமூக விடுதலையுடன் இணைந்தே வெளிப் பட்டுள்ளது.

மிக அண்மைக் காலங்களில், மலையக இலக்கியக் கோட்பாட்டுத் தளத்தில் பல மாற்றங்களும் புதிய போக்குகளும் தென்படத் தொடங்கியுள்ளன. அறுபது களில் மலையக இலக்கியத்தில் வெளிப்பட்ட இலக் கியப் போக்கின் அடுத்த கட்ட வளர்ச்சியை இக்காலப் பகுதிகளில் தரிசிக்கக் கூடியதாக உள்ளது. சமுதாய சிந்தனையுடனும் வரலாற்றுணர்வுடனும் இலக்கியம் படைக்கக்கூடிய புதிய படைப்பாளிகளும் திறனாய் வாளர்களும் தோன்றி மலையக இலக்கியத்திற்கு காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருகின்றனர்.

மறுபுறமாக, ஓர் காலகட்ட ஆர்ப்பரிப்பில் முற்போக் குணர்வுடனும் சமுதாயக் கண்ணோட்டத்துடனும் இலக்கியம் படைத்த சிலர் இக்காலச் சூழலில் தத்துவார்த்தரீதியாக சிதைவடைந்து செல்வதையும் காணலாம். தி. ஞானசேகரனின் 'குருதி மலை' நாவலில் வெளிப்பட்ட சமுதாய உணர்வு, 'லயத்துச் சிறைகள்' நாவலில் சிதைவடைந்து செல்வதனையும் சு. முரளி தரனின் சமுதாயப் பார்வை அவரது அண்மைக்காலக் கவிதைகளில் ('தேசத்தின் கரங்கள் சொல்லும் சேதி' - கவிதை) நலிவடைந்து செல்வதனையும் 'தீர்த்தக் கரை' சஞ்சிகையின் ஆசிரியர் எல். சாந்திகுமார் சிந்தனைரீதியாக சீரழிந்தது மாத்திரமன்றி எழுத்து லகில் இருந்தே அஞ்ஞாதவாசம் சென்றுவிட்ட துயரினையும் இவ்விடத்தில் உதாரணங்களாக கூறலாம்.

தவிரவும், மலையக இலக்கியத்திற்கு மாத்திர மன்றி, இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத் திற்கும் தமது மொழிபெயர்ப்பு சார்ந்த பணியினூடாக பங்களிப்பினை நல்கியவர் கே. கணேஷ். பிறநாட்டு நல்லறிஞர்களின் இலக்கியப் படைப்புகளை உள்ளடக்கம், உருவகம் சிதையாத வகையில் மொழி பெயர்த்துத் தந்தமை - இவரது காத்திரமான பங்களிப் பாகும். குறிப்பாக, லூசுன் சிறுகதைகள், கோசிமின் சிறைக் குறிப்புகள், குவாஜா அகமது அப்பாஸின் குங்குமப்பூ, அஜந்தா ஆகியவற்றையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

இவ்வாறிருக்க, மிக அண்மையில் 'களம்' சஞ்சிகை யில் வெளிவந்த அவரது நேர்காணல் அவரது மதம் பற்றிய பிற்போக்கான பார்வையை வெளிப்படுத்து வதாக அமைந்துள்ளது. நேர்காணலை மேற்கொண்ட கலாநிதி எம். ஏ. நுஹ்மான் அவர்கள் கே. கணேஷ் அவர்களின் அந்திமக் காலத்தடுமாற்றத்தினையும் சாதகமாகக் கொண்டு மார்க்சிய இலக்கிய கர்த் தாக்கள் யாவரும் இறுதியில் மதத்தில்தான் சங்கம மாகின்றார்கள் என்ற கருத்தினை கே. கணேஷ் மூலமாகக் கொண்டு வருவதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளார். மார்க்சியக் கோட்பாட்டை சிதைப்ப திலும் அதனைத் தவறாகக் காட்ட முனைவதிலும் இவர்களின் எத்தனிப்புகள், முயற்சிகள் தற்செய லானவை அல்ல.

மறுபுறமாக, கே. கணேஷின் மதச்சார்பு என்பது அவரது அந்திம காலத்தில் ஏற்பட்ட சிந்தனை அல்ல. அவரது ஆரம்ப காலம் தொட்டே இருந்து வந்துள்ள ஒன்றாகும் என்ற உண்மையினை/ பக்கத்தினை வெளிக்

கொணர்வதில் 'நந்தலாலா' சஞ்சிகைக் குழுவினரின் நேர்காணல் முக்கியமானதொன்றாகும். ஆயினும் கே. கணேஷின் மதம்பற்றிய பார்வையைத் துருவித் துருவி ஆராய்ந்து வெளிக்கொணர்வதில் காட்டிய அக்கறையும் ஆர்வமும் அவரது மொழிபெயர்ப்புத்துறை குறித்த பங்களிப்பைக் கொணர்வதில் காட்டத் தவறிவிடுகின்றனர். மதம் குறித்த இத்தகைய பார்வையைக் கொண்டிருந்த கே. கணேஷால் கூட எத்தகைய பங்களிப்பினை ஒரு நாகரிகமான பக்கத்திற்கு வழங்க முடிந்தது என்பது குறித்த ஆய்வுகள் வெளிவர வேண்டியது அவசியமானதாகும்.

மேலும் சமுதாய நோக்கம் கொண்ட கவிதைகளை எழுதிக் குவித்தால், மானுடக் காதலையும் அன்பையும் யார் பாடுவார்கள் என்ற பிரகடனத்துடன் கவிஞர் வைரமுத்துவின் அங்கீகாரத்துடனும் வெளிவந்துள்ள செல்வி யோகேஸ்வரி துரைப்பாண்டியின் கவிதைகள் இப்பண்பில் கால் பதித்து, பாலியல் விசாரத்தில் சற்றே அந்நியப்பட்டு நிற்கும் பெ. லோகேஸ்வரனின் கவிதைகளும் அதீத நம்பிக்கை வரட்சி, அந்நியமயப்பாடு, மனோவிகாரம், போலி மேதாவித்தனம், வரலாற்று உணர்வின்மை போன்ற இவர்களது கவிதைகளில் மலிந்து காணப்படுகின்றன.

ஈழத்து இலக்கியச் செல்நெறியில் மலையக இலக்கியம் அதன் பிரிக்க முடியாத பிரதேச இலக்கியக் கூறாக காணப்படுகின்றது. அவ்வகையில் மலையக இலக்கியமானது ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளதுடன் ஈழத்து இலக்கியப் பரப்பினை ஆழ அகலப்படுத்தியுள்ளது எனலாம். இதனை முற்போக்கு மார்க்சிய இலக்கிய கர்த்தாக்கள் புரிந்து கொள்ளும் விதம் தனித்தன்மை கொண்டதாக இருக்கும்; இருக்க வேண்டும்.

---

அடிக் குறிப்புகள்

1. சிவத்தம்பி.கா (1978) ஈழத்துத் தமிழ் இலக்கியம் - நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை பக். 03
2. வேலுப்பிள்ளை சி.வி. (1993) (தொகுப்பாசிரியர்) மலைநாட்டு மக்கள் பாடல்கள்
3.
4.
5. முத்துவேல். எம் (கட்டுரையாசிரியர்) (1999) புதுவசந்தம், தேசிய கலைஇலக்கியப் பேரவை, இலங்கை
6. சாந்திகுமார். எல் (1981) தீர்த்தக்கரை இதழ் - பக் 27
7. தம்பையா. இ (1995) மலையக மக்கள் என்போர் யார்? - புதியபூமி வெளியீட்டகம், கொழும்பு, - பக் 59, 60
8. சாருமதி (தொகுப்பாசிரியர்) (1997) - சுபத்திரன் கவிதைகள்: பூவரசு இலக்கியவட்டம், பக். 143
9. சிவத்தம்பி. கா (கட்டுரையாசிரியர்) (1995) - புதுமை இலக்கியம், முற்போக்:கு எழுத்தாளர் சங்கம், கொழும்பு
10 லெனின் வி. ஐ. (1974) சோஷலிச சித்தாந்தமும் கலாசாரமும் குறித்து, முன்னேற்றப் பதிப்பகம் மொஸ்கோ பக்

# மூன்றாவது மனிதன்

## இதழ்-19
## டிசம்பர் 2006 - ஜனவரி 2007



**தொடர்புகளுக்கு:**
ஆசிரியர் -
மூன்றாவது மனிதன்
அவிசாவெல றோட்
வெல்லம்பிட்டிய
இலங்கை.

**தொலைபேசி:**
00 94 77 3131627

மின்னஞ்சல் : thirdman publication@yahoo.com

**கட்டுரைகள்**
இரண்டாம் பாலினத்தின் இரகசியக் கதைகள்(தூயன்)
யாழ்ப்பாண நாட்குறிப்பு
(முரண்வெளியில் இருந்து, muranveliemag.blogspot.com)
இலக்கியம் பயணிக்கும் இன்னொரு பாதை
(ஜிப்ரி ஹஸன்)
மேற்குலகின் மனச்சாட்சி (ஹரன்)
நாளிதழ்களின் பங்களிப்பு - வீரகேசரி
(தெளிவத்தை யோசப்
மறுபாதியின் கதை (அதீதன்)
அன்புடன் லெபனானிற்கு... (சந்தூஷ்)
ஈழநாடு இதழின் புனைகதைப் பங்களிப்பு
(செங்கை ஆழியான்)
33வது இலக்கியச் சந்திப்பும் பெண்கள் சந்திப்பும்
(ராதை)

**சிறுகதைகள்**
இருக்கிறது - சாந்தன் -
விடலை - சட்டநாதன் -
நே - 1 - இராகவன் -
- 'அதனை' ஆராதனை செய்! - எஸ். நஸ்றுதீன் -
- சந்தரே வரும்வரை (மொழிபெயர்ப்பு)
- இப்னு அஸுமத் -

அனார், இளைய அப்துல்லா, பஹீமா ஜஹான், தில்லை, ஆமிரபாலி, சோலைக்கிளி, றிஸ்வியூ நபீல், நவாஸ் சௌபி, யசோதர, தவ சஜீதரன், மபர்க்ஸ் பிரபாகர், ஏ. இக்பால், மலர்ச்செலவன், எஸ். போஸ். ஆகியோரின் **கவிதைகள்**

**விசேடங்களாக:**
**ஏ. ஜே. நினைவுகூரல் கட்டுரைகள்**
**ராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்தின் நேர்காணல்**